2003 ஏப்ரல் 8]

அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் நெரிசலாகவும் உள்ளது. இதனைத் துரிதமாக மாற்றுவதற்கு வனத் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தினைக் கோரி மத்திய அரசின் ஒப்பதலுக்கு அனுப்பியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். தேனியில் நெரிசலான நிலையைப் போக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கை எடுத்து, அவருடைய தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன் என்ன?

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வழக்கம்போல் அறையில் வந்து கேளுங்கள் என்று சொல்லாமல் தாங்கள் இங்கேயே எங்களுக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். ஒன்று உரிமைப் பிரச்சினை சம்பந்தப்பட்டது. நாங்கள் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், வழக்கம்போலத்தான் சொல்கிறேன். அறையில் வந்து கேளுங்கள். (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: இரண்டாவது பிரச்சினை ராணி மேரி கல்லூரி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. எடுத்துக்கொள்ளவில்லை. ஒத்திவைப்புப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அறையில் வந்து கேளுங்கள். காவல் துறை மானியக் கோரிக்கைகள் இன்றும், நாளையும் இருக்கின்ற காரணத்தினால் எந்த ஒத்திவைப்புப் பிரச்சினையையும் எடுத்துக்கொள்ளவில்லை. 10 ஆம் தேதி எடுத்துக்கொள்வதற்கு யோசிப்போம்.

திரு. துரைமுருகன்: இன்றும், நாளையும் இல்லாமல், நாளை மறுதினம் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குத் தங்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் சொல்லவில்லை.

(ஆ) திரு. பரிதி இளம்வழுதியைப் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கி 18 நாட்கள் ஆகிவிட்டன. சட்டமன்றக் கூட்டங்களிலே எல்லா உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைக் கூறுவதோடு அவர்களுடைய தொகுதிப் பிரச்சினைகளை, மக்கள் பிரச்சினைகளையெல்லாம் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். சென்ற கூட்டத்தொடரிலே suspend செய்யப்பட்ட உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் இந்தக் கூட்டத்தொடரிலேயும் அதே நிலையிலே, சட்டசபைக்கு வர முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர் மீண்டும் சட்டசபைக்கு வந்து, சட்டசபை நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு கடமை ஆற்றுவதற்குத் தாங்கள் வழிகோல வேண்டுமென்று நான்—அவர் சார்பிலே அல்ல, அவர் கட்சி சார்பிலேகூட அல்ல—அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) குறிப்பாக அனைத்து எதிர்க்கட்சிகள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) கோரிக்கை வைக்கிறேன். நியாயமான கோரிக்கை. இதுவரை யாருமே இரண்டு தொடர்கள் சேர்ந்தாற்போல் சட்ட சபையிலேயிருந்து suspend செய்யப்பட்டது கிடையாது.